## ஜீஎஸ்எம்பீ தொழிநுட்ப சேவை (தனியார்) கம்பனி - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜீஎஸ்எம்பீ தொழிநுட்ப சேவை (தனியார்) கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானம் மற்றும் தடுத்து வைத்த உழைப்பு தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அல்லது அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைக்க நேரிடும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் மீது தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரி ய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

**1.5.2 சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுக்கு தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்ததின் பிரிவு 2.5.2 பிரகாரம் வருமானத்திற்கு செலவுகளை பதிலீடு செய்யக்கூடாது. எனினும் யக்கல மணல் விற்பனவு நிலையத்தின் மணல் இருப்பு போக்குவரத்துச் செலவு ஆகிய ரூபா 24,144,313 தொகை அதனது வருமானத்துடன் பதிலீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதியாகிய ரூபா 12,150,034 தொகை வருமானம் எனக் காட்டப்பட்டுள்ளது. | மணல் இருப்பு போக்கு வரத்துச் செலவினை வருமானத்திற்கு பதிலீடு செய்து தேறிய பெறுமதியை காட்டுதல் மேற்கொள் எப்பட்டிருக்காதுடன் மணலின் விலையை தீர்மானிக்கும் போது இணங்கிய பிரகாரம் உரிய போக்கு வரத்துச் செலவினை பொறுப்பு கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் பிரிவுகள் 4.4 மற்றும் 4.5 இன் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 16,025,583 தொகைக்கான குறுகிய கால முதலீடுகள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆண்டு முதல் நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | நியமத்தின் பிரிவு 11.21 பிரகாரம் சேதப்படுத்தப்பட்ட நட்டங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கம்பனியின் 2019 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 106,266,872 தொகைக்கான பெற வேண்டிய கணக்குகளில் 5 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 10,529,725 இற்கான மீதியொன்று காணப்பட்ட போதிலும் அதற்காக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் 2019 ஆண்டு முதல் சேதப்படுத்தப்படும் நட்டங்களை இனங்காண் பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் பிரிவு 17.19 பிரகாரம் முற்றாக பெறுமானத்தேய்வு கழிக்கப் பட்ட ரூபா 50,368,512 தொகை கிரயத்தை உடைய நிலையான சொத்துக்கள் கம்பனியினால் இடையறாது பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் சொத்தின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் மற்றும் கழிவுத் துண்டு பெறுமதி மீள் மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் கணக்குகளில் தேவையான சீராக்கல் கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதியை சமர்ப்பிப்பதற்காக சொத்தின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் மற்றும் கழிவுத் துண்டு பெறுமதியை மீள் மதிப்பீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நியமத்தின் பிரிவு 21.15 இன் பிரகாரம் வெளித் தரப்பினரால் கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தொடர்பாக ஏற்படக் கூடிய நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | குறிப்பிட்ட வழக்கு தொடர்பான தகவல்களை ஆய்வு செய்து எதிர்வரும் வருடத்தில் அதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும் என அறிவிக்கின்றேன். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஊ) | நியமத்தின் 28.15 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடைக்கான கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்க வில்லை. | பணிக்கொடை தொடர்பான கணக்கீட்டுக் கொள்கையின் 3.7 பந்தியின் பிரகாரம் உட்படுத்தப்பட்டது. கணக்கீட்டு நியமங்களின் படி சமர்ப்பிப்பதில் குறைபாடு ஏற்பட்டிருந்தால் அவற்றை எதிர்காலத்தில் சரியாகக் காட்டுவதற்கு எதிர்பார்க்கின்றேன். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (எ) | நியமத்தின் பிரிவுகள் 29.27 மற்றும் 29.31 பிரகாரம் பிற்போடப்பட்ட வரி தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பிற்போடப்பட்ட வரி தொடர்பான 3.2 பந்தியின் பிரகாரம் உட்படுத்தப்பட் டுள்ளது. சமர்ப்பிப்பதில் குறைபாடு ஏற்பட்டிருந்தால் அவற்றை எதிர்காலத்தில் சரியாகக் காட்டுவதற்கு எதிர்பார்க்கின்றேன். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஏ) | நியமத்தின் பிரிவு 33.9 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில், தொடர்புடைய தரப்பினர் என்ற வகையில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 25,930,990 இற்கான மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய தரப்பினரிடம் பெறவேண்டிய மீதிகள் தொடர்பாக 2019 ஆண்டு முதல் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் பங்களிப்புத் தொகை ரூபா 564,017 தொகை மற்றும் ஊழியர் பணிக்கொடை செலவுகள் ரூபா 139,837 தொகை கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், 2019 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 339,694 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | 2019/2020 கணக்காண்டு களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்காக செலுத்தப் பட்ட ரூபா 9,053,153 இற்கான மிகை ஊதியம் மீளாய்வாண்டின் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்த துடன் அவற்றில் ரூபா 7,237,068 தொகை கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் கிடைப்பதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. | 2019/2020 ஆண்டின் போது மிகை ஊதியம் செலுத்து வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. எதிர்வரும் நிதியாண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கை கிடைத்த பின்னர் மிகைஊதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மிகை ஊதியம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நுகேகொடவில் நடத்தப்பட்ட மணல் பொதி விற்பனை நிலையத்தின் நட்டத்தை கணக்கிடும் போது ரூபா 1,031,332 இற்கான செலவுகள் அதில் உட்படுத்தியிருக்கவில்லை. | முதற் தடவையாக மணல் பொதிகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் போது செலவிடப்பட்ட ரூபா 767,332 தொகை மற்றும் நிலையத்திற்கு முற்பகுதி யில் விளம்பர பலகை ஒன்று பொருத்துவதற்காக மேற் கொள்ளப்பட்ட ரூபா 264,000 என்பன நட்டத்தை கணிக்கும் போது உட்படு த்தப்பட்டிருக்கவில்லை. | செலவுகள் சரியாக கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019-2023 காலப் பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் பெறுகை வழிகாட்டலைக் கடைபிடிக்காமல் ரூபா 2,295,918 (வரி இன்றி) இற்கான கட்டணத்திற்கு வெளி தனியார் நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப் பட்டிருந்த போதிலும் அது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறிப்பிட்ட திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019-2023 காலப்பகுதி க்கான கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபைக்கு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப் படும். | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தாயரிக்க ப்பட்டு அது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்காக கம்பனியினால் ரூபா 2,244,898 தொகை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தப் பட்டிருந்தது. | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியக கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்காக ரூபா 2,581,632 தொகை (பெறுமதி கூட்டிய வரி உட்பட) 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். மேலும் வெளி நிறுவனங் களின் செலவுள் மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நுகேகொடயில் நடாத்தப்பட்டு வந்த மணல் பொதிசெய்து சந்தைப்படுத் தும் செயற்திட்டத்தின் ஆரம்ப விழாவுக்காக ரூபா 767,331 தொகை செலவிடுதல் தொடர்பாக மற்றும் ரூபா 79,500 தொகை நட்டம் ஏற்பட்டிருந்த மணல் பொதிகளின் விலையை குறைத்து விற்பனை செய்தல் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றிருக்க வில்லை. சந்தைப்படுத்தும் நிலையத்தின் சந்தைப்படுத்தல் 2019 மார்ச் முதல் நிறுத்தப்பட்டிருந்த போதும் ஏப்ரல் மாத கட்டிட வாடகை யாக ரூபா 150,000 தொகை பயனற்ற முறையில் செலவிடப்பட்டிருந்தது. | மணல் பொதி செய்யும் செயற்திட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஒன்றான தால் அதனை ஆரம்பிக் கும் போது ஆரம்பக் கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டது. 2019 மே மாதம் முதல் புதிய முறையின் கீழ் மணல் பொதி சந்தைப் படுத்தப்பட்டது. எச் சந்தர்ப்பத்திலும் மணல் பொதிகளின் விலை குறைத்து விற்பனை செய்யப்படவில்லை. மார்ச் மாதம் மணல் விற்பனை நிலையம் மூடப்பட்ட பின்னர் அந்த இடத்தை பிரித்து களஞ்சியப் பிரிவு, தோண்டுதல் பிரிவு, விஷேட செயற்திட்டப் பிரிவு என்பவற்றிற்கு வழங்கப்பட்டது. | பணிப்பாளர் சபை யின் அங்கீகாரத்தை பெற்று அதன் பிரகாரம் செயற்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 3,591,549 இற்கான வள்ளங் கள் கடன் வழங்கப்பட்ட நபர்கள் காணப்படாமை மற்றும் அறவீடு செய்வதற்கு முறையான நடைமுறை ஒன்று காணப்படாமை யின் காரணத்தினால் ரூபா 445,476 தொகை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மணல் கரையில் போடுவதற்கு தொழிலாளர் சேவை பெற்றுக் கொள்வதற்காக தொழிலாள ருக்கு தேவையான வள்ளங்கள் மற்றும் வாளிகள் பெற்றுக் கொள்வதற்காக நிறுவனத்தினால் கடன் தொகை ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேலைக்கு சமூகமளிக்காத தொழிலாளரிடம் அந்த கடன் தொகையை தீர்ப்பதற்கு முடியாது போனது. இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அறவீடு செய்வதற் கான இயலுமையை கண்டறிய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கடன் தொடர்பாக முறையான பதிவுகள் பேணப்பட்டு அவை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் | | | |
| (i) பிரிவு 5(2) | பங்கிலாபம் செலுத்த இயலுமென சான்றிதழ் ஒன்று கணக்காய்வாளரி னால் பெற்றுக் கொள் ளாமல் பணிப்பாளர் சபையினால் 2017/2018 நிதியாண்டு தொடர்பாக ஒரு பங்கு ரூபா 10 வீதம் ரூபா 6,000,000 இற்கான பங்கிலாபம் ஒன்று செலுத்தப்பட்டி ருந்தது. | அடுத்த நிதியாண்டு முதல் கடன் செலுத்தக் கூடிய இயலுமை தொடர் பான சான்றிதழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் பெற்று பங்கிலாபம் செலுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தில் தீர்மானிக்கப் பட்டவாறு செயற்பட வேண்டும். |
| (ii) பிரிவு 133 | 2018 பஞ்சாங்க ஆண்டி ற்காக வருடாந்த பொதுக் கூட்டம் நடாத் தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் நட்பு ஒன்றுகூடல் நடாத்து வதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக | சட்டத்தில் தீர்மானிக்கப் பட்டவாறு செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திட்டமிட்ட வாறு வருடாந்த பொதுக்கூட்டம் நடாத் துவதற்கு முடியாமல் போனதுடன் குறிப்பிட்ட தினத்தில் நட்பு ஒன்றுகூடல் மாத்திரம் நடாத்தப்பட்டது. | |
| | (iii) பிரிவு 166 | 2017/2018 நிதியாண்டுக் காக ஆண்டறிக்கை தயாரித்திருக்கவில்லை. | இனிவரும் காலத்தில் அந்த ஆண்டறிக்கை உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தில் தீர்மானிக்கப் பட்டவாறு செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பகுதியின் பிரிவு 10(6) | ஊழியர் ஊதியக் கொடுப்பனவின் போது முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பியிருக்கவில்லை. | ஊழியர்களிடம் அறவீடு செய்துள்ள முத்திரைக் கட்டணத் துடன் முன்வரும் காலத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 135 | பணிப்பாளர் சபையினால் வருடாந்தம் நிதி அதிகாரக் கையளிப்பு மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை. | 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதிய GSMBTS/129/12 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் பணிப்பாளர் சபை யினால் நிதி அதிகாரக் கையளிப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் பின்னர் பணிப்பாளர் சபையினால் நிதி அதிகாரம் சாட்டுதல் கள் வருடாந்தம் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமா ணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நி.பி. 756, 507(2) மற்றும் 507(3) | நிலையான சொத்துக் களை கணிப்பீடு ஒன்றுக்கு ஆளாக்கி கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நடைமுறை ஆண்டு முதல் உரிய முறை யில் நிலையான சொத்துக்கள் கணிப்பீடு மேற்கொள் ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு | நிதிப் பிரமா ணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப் படும். | |
| (ஈ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 6.5.3 | 2015/2016, 2016/2017 மற்றும் 2017/2018 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை 2019 ஜுலை அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பந்தி 8.3.3 | செலுத்த வேண்டிய மிகை ஊதியம் உச்ச அளவு 2 மாத சம்பளம் ஆக இருக்க வேண்டிய போதிலும் 3 மாத மொத்தச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 9,063,153 இற்கான மிகை ஊதியம் 2017/2018 ஆண்டின் போது ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனியினால் வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தை அடிப்படையாக வைத்து அனைத்து ஊழியர்களுக்கும் படி ஒன்றாக மூன்று மாத மொத்தச் சம்பளம் அன்றி அடிப்படை சம்பளத்தை அடிப்ப டையாகக் கொண்டு மிகை ஊதியம் வழங்கப்பட்டது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) பந்தி 8.3.9 | சுற்றறிக்கைக்கு முரணாக 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் ஊழியர் களுக்கு பரிசு வவுசர்கள் வழங்குவத ற்காக ரூபா 2,596,500 தொகை செலவிடப்பட் டிருந்தது. அங்கீகாரம் இன்றி கம்பனி ஊழியர் கள் இருவருக்கு பாதுகாப்பு அமைச்சில் மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் சிறுநீரக நோய் தடுப்பு செயலா ற்றுகை சேனைக்கு விடுவிக்கப்பட்டு அவர் களின் சம்பளம் மற்றும் ஊதியங்கள் ஆக கம்பனியினால் 2018 திசெம்பர் 31 வரை ரூபா | 2018 ஏப்ரல் மாதத் திற்காக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியக ஊழியர்களுக்கு பரிசு வவுசர்கள் வழங்கியிருந்தது பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடனே. தற்போது இந்த ஊழியர்களின் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,103,296 தொகை கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) 2015 ஜூன் 17 ஆம் திகதிய PED03/2015 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 2.2 | வரிசை அமைச்சரின் இணக்கம் மற்றும் நிதியமைச்சரின் அங்கீகாரத்தை பெறாமல் தலைவருக்கு ரூபா 50,000 மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றும், பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 6,000 தொகை மற்றும் மூன்று பணிப்பாளர்களுக்கு ரூபா 11,000 வீதம் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்கு பற்றல் கொடுப்பனவு ரூபா 1,051,929 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முன்வரும் காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் தலைவர் கொடுப்பனவு மற்றும் பங்குகொள்ளல் கொடுப்பனவுக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதியமைச்சரின் இணக்கமும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பந்தி 2.5 | மனம்பிட்டிய மணல் தோண்டும் செயற் திட்டத்தினால் ஒரு மாதத்திற்கு ரூபா 20,000 வீதம் மொத்தம் ரூபா 233,571 இற்கான படி சபைத் தலைவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | 2019 மார்ச் மாதம் முதல் இந்தப் படி வழங்காமல் இருப்ப தற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) பந்தி 2.8 | கம்பனியின் பணிப்பாளர் மூவருக்கு ரூபா 100,000 வீதம் ரூபா 300,000 கௌரவ படியாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனி 2017/2018 நிதியாண்டில் வரிக்கு பின்னரான தேறிய இலாபம் மிகவும் கூடிய தொகை ஒன்றினை உழைத் திருந்ததால் கௌரவ கொடுப்பனவு ஒன்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது கொடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் வரிசை அமைச்சுச் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதியமைச்சரின் இணக்கம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய PED/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) பந்தி 01 | விளம்பர அல்லது மேம் பாட்டு அலுவல்கள் அல்லாத சமூக உபசரணை அலுவல்கள் மற்றும் வெகுமதிகளுக் காக கூட்டிணைந்த சமூகப் பொறுப்பில் இருந்து ரூபா 2,726,650 தொகை செலுத்தப் பட்டிருந்தது. | நிறுவனம் சார் நலன் களை நெருங்கும் நோக்கத்துடன் மேற் கொள்ளப்படாததுடன் சமூக உபசரணை அலுவல்கள் என கணித்து கூட்டிணை ந்த சமூக பொறுப்பு எண்ணக்கரு அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) பந்தி 02 மற்றும் 03 | மீளாய்வாண்டிற்காக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக் ப்பட்டு அங்கீகாரத்திற் காக சமர்ப்பிக்கப்படாத துடன் கூட்டிணைந்த சமூகப் பொறுப்பை நிறை வேற்றும் நிதியத்தின் மூலம் செலவிடுவதற்கு எதிர்பார்த்த செலவுகள் பாதீட்டிலும் உட்படுத்தி இருக்கவில்லை. | 2019 பாதீட்டில் உட்படுத்துவதற்கும், மேம்பாட்டுத் திட்டத்தில் உட்படுத்துவதற்கும், நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) பந்தி 05 | விளம்பர மற்றும் மேம் பாட்டு அலுவல்களுக் காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை மிகைத்து ரூபா 9,816,396 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2020 ஆண்டு முறையான மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பதற்கும் அதன் மூலம் சுற்றறிக்கை ஏற்பாடு களுக்கு இணங்கு வதற்கும் அலுவல் கள் வழங்கப்படு கின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iv) பந்தி 06 | 06 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 2,855,276 தொகைக்கான ரூபா 100,000 இற்கான மிகையான வெகுமதி அனுசரணைப் பங்களி ப்புக்காக திட்டமிடல் அமைச்சரின் அங்கீகார த்தைப் பெற்றிருக்க வில்லை. மேலும் ரூபா 507,807 இற்கான அனுசரணை செலவு களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மற்றும் ரூபா 2,267,750 தொகை பணிப்பாளர் சபையில் அணவல் அங்கீகாரத் துடன் செலுத்தப்பட்டி ருந்தது. | இதன் பின்னர் உரிய அங்கீகாரத்துடன் வெகுமதி அல்லது அனுசரணைப் பங்களிப்பு வழங்கு வதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய PED/03/2018 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 2.3 | மிகைஊதியம் பெறுவத ற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகளை பூர்த்தி செய்திருக்காத 145 ஊழியர்களுக்கு 2017/2018 ஆண்டிற்காக மிகை ஊதியமாக ரூபா 1,751,175 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2018/2019 ஆண்டின் போது 2017/2018 நிதியாண்டின் ரூபா 83,956,128 இற்கான வரியின் பின்னர் தேறிய இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகார த்தை பெற்று ஒரு ஊழியருக்கு ரூபா 13,500 வீதம் மிகை ஊதியம் செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை யின் பந்தி 5.2 | மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் ஒன்று தயாரித் திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்பட் டுள்ளவாறு கம்பனி யினால் தற்போது Colombo Business School நிறுவனத் துடன் தொடர்பு கொண்டு 2019/2023 இற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 37,806,854 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 83,956,127 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 46,149,273 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. செயற்திட்ட வருமானம் ரூபா 2,254,151 இல் மற்றும் ஏனைய செயற்பாடு அல்லாத வருமானங்கள் ரூபா 7,620,149 இனால் அதிகரித்து வருமான வரி செலவு ரூபா 20,198,900 இனால் குறைந்திருந்த போதிலும், செயற்திட்டச் செலவுகள் ரூபா 47,302,468 இனாலும், நிர்வாகச் செலவுகள் ரூபா 27,743,697 இனாலும் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 1,247,394 இனாலும் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்திற்கான வேத்து ரிமைக் கட்டணம் மற்றும் வரிகள் குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப் படாமையால் அது தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 1,671,985 தொகை தண்டப் பணம் செலுத்த நேரிட்டமையால் அந்த செலவு சிக்கனமற்ற செலவு ஒன்றாக காணப்பட்டது. | 3 நாட்கள் தாமதமென ரூபா 1,513,857 இற்கான தண்டப் பணம் அறவீடு செய்வதற்காக நேரிடும் என குறிப்பிட்டு பணியகத்தினால் கடிதம் ஒன்று அனுப்பியிருந்ததுடன் அதன் படி நிதி ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டன.<br>2016/2017 ஆண்டிற்காக செலுத்தியிருக்காத வரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன் அதற்காக ரூபா 158,128 இற்கான தண்டப்பணம் கொடுப்பனவு செலுத்த வேண்டிய நிச்சயமற்ற தன்மையின் காரணமாக 2016/2017 நிதி ஆண்டு முதல் மேற்கொள்ளப் பட்ட நிதி ஏற்பாடு ஒன்றான இது 2018/2019 கணக்கு களிலும் தொடர்ந்தும் காட்டப்பட்டுள்ளது. தண்டப் பணத்தை அகற்றுவதற்காக | உரிய தண்டப் பணத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யக்கல மணல் விற்பனை நிலையத்தில் மணல் ஏற்றும் இயந்திரம் ஒன்று வெளி நிறுவனங்களின் கருமங்கள் நிறைவேற்றியது தொடர்பாக ரூபா 35,840 தொகையும் இயந்திரத்தை செயற்படுத்தாது இருந்த 12 நாட்களுக்காக ரூபா 90,000 தொகையும் கம்பனி செலுத்தி இருந்தது. | மணல் விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவிற்கு ஒத்த நிகழ்வாக பசுமை அடிப் பாதை மாதிரி ஒன்று காட்சிப் படுத்துவதற்காக நேரிட்டமையால் அவ்விடயத்திற்காக ரூபா 35,840 தொகை செலுத்தி இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டதென கருணையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | குறிப்பிட்ட முறையற்ற கொடுப்பனவுகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 ஆண்டின் போது கம்பனிக்கு சாட்டப்பட்ட கொடிகம்பொக்க படியப்படிவு தோண்டும் அலுவல்கள் 2019 ஜுலை வரை ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறாயினும் 3 வருடங்களாக தோண்டப்படும் படியத்தை களஞ்சியப்படுத்துவதற்காக காணி ஒன்று குத்தகைக்கு எடுத்தல், படியத்தை நிறுவை செய்வதற்காக தரைத்தராசு ஒன்று பொருத்துதல், பாதுகாப்பு ஊழியர்கள் ஈடுபடுத்துவதற்காக முறையே ரூபா 2,974,000 தொகை, ரூபா 2,530,000 தொகை மற்றும் ரூபா 3,017,050 தொகை உட்பட மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 12,699,841 தொகை செலுத்தி இருந்ததுடன் அச்செலவு பயனற்ற செலவொன்றாக காணப்பட்டது. தரைத் தராசின் உத்தரவாத காலப் பகுதியுள் 2 வருடங்கள் 6 மாதங்கள் பயன்படுத்தப்படாமல் தொழிற்படாது காணப்பட்டது, | 2017 மாரச் 17 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி இந்த படிகக் கல் தோண்டும் அலுவல்கள் அடிப்படை சுற்றாடல் அங்கீகாரத்தின் கீழ் மேற் கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது ஆரம்ப சுற்றாடல் மேற்பார்வை அறிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் விரைவாக ஆரம்பிக்கக் கூடியதாக உள்ளது. 2016 ஆண்டின் போது தரைத் தராசு பொருத்தியமையால் காணிக்கு இடையறாமல் கொடுப்பனவு செய்ய நேரிட்டிருந்தமையால் அந்த தரைத்தராசின் முக்கியமான உபகரணங்களை கழற்றி யக்கல களஞ்சியத்திற்கு கொண்டு வருவதும் காணிக் காக செலுத்தி பணத்தை குறைப்பதற்கும் தேவையான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கும் பயனற்ற செலவுகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் ஊழியர் நட்பு ஒன்றுகூடல் நடாத்து வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 2,118,810 தொகை செலவிடப்பட்டி ருந்த போதிலும் வருடாந்த நட்பு ஒன்றுகூடல் மாத்திரம் நடாத்தப் பட்டிருந்தது. | 2018 ஒக்தோபர் 25 ஆம் திகதி அளவில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக உரிய தினத்தில் நட்பு ஒன்றுகூடல் மாத்திரம் நடாத்துவதற்கு நேரிட்டது. | திட்டமிட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி நடாத்தியிருந்த கனிப்பொருள் மற்றும் தோண்டும் 5 செயற்திட்டங்களில் இருந்து ரூபா 11,505,566 தொகையும் வெடிப்புக்கள், மேற்பார்வை மற்றும் மதியுரை சேவை செயற் திட்டங்கள் 4 இல் இருந்து ரூபா 3,163,058 தொகையும் நட்டம் ஏற்பட்டிருந்தது. | அம்பாறை மணல் செயற்திட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை சரளைக்கல் செயற்திட்டம் ஆகிய செயற்திட்டங்கள் நிறுத்தப் பட்டமை, கொடிகம்பொக்க மற்றும் கந்தளாய் செயற்திட்ட ங்கள் ஆரம்பிக்கப்படாமை மற்றும் யான்ஓயா செயற்திட்டம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்துக்கு உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றின் ஊழியர் களுக்கு மற்றும் பராமரிப்பு அலுவல்களுக்கான செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டமை யால் நட்டம் ஏற்பட்டது.<br>எவ்வாறாயினும் 2019/2020 நிதியாண்டு முதல் செயற்திட்டம் தற்போது பூர்த்தி செய்யப்பட்ட கட்டங்களின் மீது வருமானத்தை சதவீதப்படி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதன் மூலம் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சிக்கல் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மணல் விற்பனையை அடிப்படை யாகக் கொண்டு மிகை ஊதியங் கள் 2, கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தியிருந்த போதிலும் மனம்பிட்டிய மற்றும் வெலிகந்த மணல் விற்பனைச் செயற்திட்டங்களில் விற்பனையை அடிப்படையாகக் கொண்டு இலக்குகளை நெருங்குவதற்கான கொடுப்பனவு என ரூபா 1,588,677 தொகையும் அந்தச் செயற்திட்ட ங்களின் ஊழியர்களுக்கு செலுத்தப் பட்டிருந்தது. | தற்போது மனம்பிட்டிய மற்றும் வெலிகந்த பதவியணியினருக்கு இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படாததுடன் எதிர்காலத்தில் செலுத்தாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட தேர்வுமுறைகளின் பிரகாரம் மிகைஊதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலைகளுக்காக மணல் வழங்கல் தொடர்பாக மேம்படுத்தும் தேவையொன்று கம்பனிக்கு இல்லாதிருந்த போதிலும் அது தொடர்பாக மேம்படுத்தல் சார் கலந்துரையாடல் ஒன்றிற்காக அனுசரணையாளர்களை பெற்றுக் கொள்வதற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியக த்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை ஒன்றிற்காக ரூபா 1,173,469 தொகை இலங்கை நிர்மாண வேலை கைத்தொழி லாளர்களின் வாணிப சபைக்கு கம்பனியினால் செலுத்தப் பட்டிருந்தது. | Chamber of Construction Industry of Sri Lanka நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட செயலமர்பு இலங்கையில் நிர்மாண துறையில் திறமை யானவர்கள் தொடர்பு படுத்தி நடாத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் நிர்மாண வேலை துறைக்கு தொடர்பு கொள்ளும் வர்த்தக சந்தர்ப்பம் ஒன்றை நெருங்கு வதற்கான எதிர்பார்ப்புடன் மேற்கூறிய நடவடிக்கை க்காக அனுசரணை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மேம்பாட்டுச் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | உயர்நீதிமன்ற தீர்ப்பொன்றின் மீது மகாவலி கங்கையில் மனம்பிடிய பகுதியில் மணல் தோண்டும் அலுவல்கள் கம்பனிக்கு சாட்டப் பட்டிருந்ததுடன் அங்கு மணல் தோண்டுவதற்காக கம்பனி 92 தோண்டும் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தது. அந்த அனுமதிப் பத்திரங்களின் மூலம் கம்பனி 36 அடிப்பட்ட பாதைகளில் மணல் தோண்டுதல் மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டதுடன் 217 மணல் அடிப்பட்ட பாதைகளில் தோண்டு வதற்காக உடன்படிக்கை ஒன்று அல்லது | மனம்பிட்டிய மணல் தோண்டும் செயற்திட்டத் திற்காக 92 தோண்டும் அனுமதிப்பத்திங்களுக்காக 19,320 கியூபிற்கான தோண்டும் கொள்திறன் காணப்பட்டதுடன் மணல் உற்பத்தியை அதிகரிப்ப தற்காக தொழிலாளர் எண்ணிக்கையை அதிகரிப் பதற்காக மூன்றாம் தரப்பினர் சேர்த்தப்பட்ட துடன் இந்த நடைமுறை யின் கீழ் மாதாந்த மணல் உற்பத்தி | குறிப்பிட்ட நடைமுறை மற்றும் அங்கீகாரத்தின் மீது மணல் தோண்டுதல் மற்றும் வினியோகித்தல் மேற்கொள் வதற்கும் உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் ஒன்று இன்றி டிபர் வண்டி சங்கம் ஒன்றிக்கு சாட்டப் பட்டிருந்தது. மனம்பிட்டிய பகுதியில் தோண்டப்படும் மணலுக்காக காணப்படும் அதிகமான கேள்வியின் காரணமாக மணல் வழங்குதல் ஒரு குறிப்பிட்ட நடைமுறை ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்க வில்லை. மீளாய்வாண்டின் போது தோண்டப் பட்ட 187,799 மணல் கியூப்களில் 44,481 தொகை மணல் கியூப்கள் பொலன்னறுவ மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக முக்கியத்துவ சேவைகள் அடிப்படையில் வழங்கப்பட்டு இருந்ததுடன் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்குத் தேவையான மணல் பற்றாக்குறைக்கு தீர்வொன்று பெற்றுக் கொடுப்பதற்கு செயற்திட்டத் திற்கு முடியாமல் போனது. | 7,000 கியூப் களில் இருந்து 19,000 கியூப் வரை அதிகரிக்க முடியுமாக இருந்தது. டோகன் முறையினூடாக மணல் வழங்குதல் மேற் கொள்ளப்பட்டதுடன், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் மற்றும் பொலனறுவ மாவட்ட செயலாளரின் பரிந்துரை மீது பொலன்னறுவ மாவட்டத்தில் மேற்கொள் ளப்படும் துரித அபிவிருத்தி செயற்திட்டங் களுக்காக மணல் வழங்கள் மேற்கொள்ளப் பட்டது. கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளின் மணல் தேவையினை பூர்த்தி செய்வதற்காக அனைத்து நடவடிக்கை களும் எடுக்கப்படும். | |

**3.6 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆண்டின் போது ரூபா 8,883,520 இற்கு கொள்வனவு செய்திருந்த ஏற்றும் இயந்திரம் 2 வருடமும் 6 மாத காலங்கள் செயற்படாமல் காணப்பட்டது. | இயந்திரத்தின் திருத்த வேலைக்காக கூடிய தொகையொன்று செலுத்த நேரிடுவதால் திருத்த வேலைக்காக கிடைக்க வேண்டிய அமைச்சின் அங்கீகாரம் கிடைக்க வில்லை என கருணை யுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சொத்துக்களை விரைவாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் 4.2 பிரகாரம் 2017/2018 ஆண்டுகளுக்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்து இருக்கவில்லை. | 2017/2018 ஆண்டுகளுக்காக பெறுகைத் திட்டம் அந்த ஆண்டுக்கான பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியினால் ரூபா 1,593,057 இற்காக பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது மற்றும் ரூபா 2,295,918 தொகை செலவிடப்பட்டு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கும் போது பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்தி ருக்கவில்லை. | சில தேவைகள் எதிர்வு கூறும் போது ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக சில கொள்வனவுக்காக பெறுகை நடைமுறைக்கு வெளியே செயற்படுவதற்கு நேரிடுவது குறைபாடு ஒன்றென ஏற்றுக்கொள்வ துடன் எதிர்காலத்தில் தேவை களை சரியாக எதிர்வு கூறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | பெறுகை வழகாட்டல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | கம்பனி புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு மீளாய்வாண்டின் போது 63 ஊழியர்கள் வழங்கியது தொடர்பாக ரூபா 29,001,002 தொகை கொடுப்பனவு தொடர்பாக உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உடன்படிக்கை களுக்கு முரணாக பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்வது தொடர்பாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ரூபா 820,000 தொகையும் வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள் வதற்காக ரூபா 476,096 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது, | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத் திற்கு ஊழியர்கள் ஈடுபடுத்தும் போது உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. சேவையின் தேவை காரணமாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் மேலதிக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி இருந்த காரணத்தினால் அதன்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தாமதத்தின் காரணமாக உடன்படிக்கையை திருத்து வதற்கு முடியாது போனது. வாகனங்களுக்காக வழங்கி இருந்த உடன்படிக்கையில் மேலதிக நேர வேலை தொடர்பாக குறிப்பிடப்பட்டி ருக்காததுடன் மேலதிநேரம் மற்றும் மாதாந்த ஓட்ட வரையறை மிகைத்த பின்னர் அதற்காக கொடுப்பனவு செய்யும் முறை தொடர்பான நிபந்தனைகள் தற்போது உரிய உடன்படிக்கைகளில் உட்படுத்தப்பட்டன. | செல்லுபடியாகும் எழுத்துமூல உடன்படிக்கை களுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டல் 5.4.4 இற்கு முரணாக ஒப்பந்தப் பெறுமதியின் 60 சதவீதம் வரையான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என ரூபா 916,200 தொகை 3 சந்தர் ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக 60% வரை முற்பணம் வழங்குதல் குறைபாடு ஒன்றென ஏற்றுக் கொள்வ துடன் எதிர்காலத்தில் அந்த குறைபாடுகள் நேரிடாமல் நடவடிக்கை எடுப்பேன் என கருணையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சட்ட ரீதியான உடன்படிக்கை ஒன்று அல்லது உரித்தாக்கல் ஒன்று இன்றி புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் பெற்றிருந்த காணியில் ஒருபகுதியை உடன்படிக்கை ஒன்று இன்றி கம்பனி உரித்தாக்கியிருந்தது. | மணல் விலையை கட்டுப் படுத்தல் தேசிய தேவை ஒன்றாக கணித்து காணியில் மணல் விற்பனை நிலையம் ஒன்று நடாத்திச் செல்வதற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மற்றும் கம்பஹா பிரதேச அலுவலகத்தின் வாய்மூலமான இணக்கம் தெரிவித்தமையால் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடல் மேற்கொள் ளப்படவில்லை. எதிர்காலத் தில் இவ்வாறான செயற் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் எழுத்துமூலமான உடன்படிக்கை ஒன்று மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என கருணை யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | காணிகள் தொடர்பாக செல்லுபடியாகும் எழுத்துமூல உடன்படிக்கை களுக்கு அணுகுவதற்கு அல்லது சட்டரீதியாக உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யான்ஓயா மணல் தோண்டும் செயற்திட்ட அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்ட கம்பனிக்குச் சொந்தமான ரூபா 1,833,038 தொகைக்கான நிலையான சொத்துக் களின் பெறுமதி அறவீடு ஒன்று மேற்கொள்ளாமல் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் பெறுமதியை அறவீடு செய் வதற்காக 2019 மார்ச் 31 திகதி ரூபா 2,107,993.39 பெறுமதியான இன்வொயிஸ் ஒன்று வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் மொத்த பதவியணி 256 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 193 தொகை கம்பனியின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தடன் 63 தொகை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு ஒப்பந்த அடிப்படையில் 30 பதவிகளுக்காக 82 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறாயினும் | தற்போது நிறுவனத்தின் ஊழியர் திட்டம் அங்கீகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. | கம்பனிக்குத் தேவையான பதவியணியினை இனங்காண்பதற்கு அல்லது அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மீளாய்வாண்டு இறுதி வரை கம்பனிக் காக தேவையான பதவியணியை இனங்காண்பதற்கோ அல்லது அங்கீகரிப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.